


இமேஜ் காலேஜ் ஆப் ஆர்ட்ஸ், அனிமேஷன் அண்ட் டெக்னாலஜி சார்பில் நடந்த நிகழ்ச்சியில், உலக கதை சொல்லும் கல்வி நிறுவன இயக்குனர் எரிக் மில்லர், 'திரைப்படம் மற்றும் அனிமேஷனில் சிறந்த முறையில் கதை சொல்லும் விதம்' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

# சினிமாவில் அனிமேஷன்

சென்னை, டிச. 8-
சென்னை கல்லூரி மாணவர்களுக்கு, 'திரைப் படங்களில் சிறந்த முறை யில் கதை சொல்வது மற்றும் அனிமேஷன்' குறித்து, உலக கதை சொல்லும் கல்வி நிறுவன இயக்குனர் எரிக் மில்லர் ஆலோசனைகளை வழங்கினார்.

இமேஜ் காலேஜ் ஆப் ஆர்ட்ஸ், அனிமேஷன் அண்ட் டெக்னாலஜி (ஐ.சி.ஏ.டி.,), இமேஜ் இன்ஸ்டிடியூட் ஆப் மல்டி மீடியா, ஆர்ட்ஸ் அண்டு கிராபிக்ஸ் சார்பில், கதை சொல்லும் விதம் குறித்து விளக்க நிகழ்ச்சி சென்னையில் ராணிசீதை அரங்கில் நடைபெற்றது.

உலக கதை சொல்லும் கல்வி நிறுவன (வோர்ல்ட் ஸ்டோரி டெல்லிங் இன்ஸ்டிடியூட்) இயக்குனர் எரிக் மில்லர், 'திரைப் படங்களில் சிறந்த முறை யில் கதை சொல்வது மற்றும் அனிமேஷன்' என்ற தலைப்பில் உரை யாற்றினார்.

மனதை உருக வைக்கும் வகையில் கதை சொல்வது எப்படி? தினசரி வாழ் வில், சுற்றுச்சூழலில் நடக்கும் யதார்த்தங்களை திரைப்படங்களில் எப்படி சித்தரிப்பது, முக்கிய கதா பாத்திரங்களுக்கு உடனடி அங்கீகாரத்தை ஏற் படுத்துவது எப்படி? உள் ளிட்டவை குறித்து எரிக் மில்லர் ஆங்கில திரைப் படக் காட்சிகளுடன் விளக்கிப் பேசினார்.

இதில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 500 மாணவர்கள் கலந்து கொண்டனர்.